12.01.2023 அன்று சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அருகே அமராவதிபுதூரில் உள்ள ஸ்ரீ இராஜ இராஜன் கல்விக் குழுமத்தில் பொங்கல் விழா கொண்டாடப்பட்டது.

இவ்விழாவில் ஸ்ரீ இராஜ இராஜன் கல்வி குழுமத்தின் கல்வி ஆலோசகரும், அழகப்பா பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தருமான முனைவர். சொ.சுப்பையா அவர்கள் தலைமை வகித்தார் மற்றும் திருமதி மாலா கோபால் நிறுவனர் தலைவர் குறள் கூடல் செம்மொழி அறக்கட்டளை, அமெரிக்கா மற்றும் திரு. ஆதிகோபால், கணினி அறிவியியல் துறை, ஹூஸ்டன் பல்கலைக்கழகம், அமெரிக்கா, அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டனர்.

இதில் தமிழர்களின் பாரம்பரிய கலைகளான கரகாட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம், சிலம்பாட்டம் என கிராமிய கலைக் குழுவினரின் நிகழ்ச்சி சிறப்பாக இருந்தது. மேலும் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள் கலை நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

உடன் ஸ்ரீ இராஜ இராஜன் கல்வியியல் கல்லூரி முதல்வர்கள் திருமதி. அங்கையற்கண்ணி மற்றும் திரு. சிவக்குமார், பொறியிலல் கல்லூரி துணை முதல்வர் திரு. மகாலிங்கம் சுரேஷ், ஒருங்கிணைப்பாளர் திருமதி வடிவாம்பாள், CBSE பள்ளி முதல்வர்கள் திருமதி. வாசுகி, திரு. வெங்கடரமணன் மற்றும் சிறப்பு விருந்தினர் NCC கர்ணல் ரஜினீஷ் பிரதாப் ஆகியோர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.